## சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்

வாராந்த பாடசாலை

பாடம் :- தமிழ் மொழியும் இலக்கியமும் — 7ம் வாரம்

தரம் :- 07 — தயாரித்தவர்:- P. கமலமாலனி (இ/ப/ இராசகலை தமிழ் வித்தியாலயம்)


Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

**பாட இலக்கம் : 14**

**தலைப்பு : கருங்காற் குறிஞ்சி.**

**01. சரி,பிழை இடுக.**

1. மலையும் மலை சார்ந்த பிரதேசம் மருதம் ஆகும். ( )
2. மதுரைக் காஞ்சியில் கருங்காற் குறிஞ்சி பற்றி குறிப்பிடப்படவில்லை. ( )
3. சிவப்பு நிற பூ பூக்கும் ஓர் அரியவகை குறிஞ்சியும் உண்டு. ( )
4. ஒவ்வொரு குறிஞ்சி செடியும் ஒரேவொரு முறை தான் வளரும். ( )
5. சங்ககால தொகுப்புகளில் குறிஞ்சி மலர் பற்றிய குறிப்புகள் உள்ளன. ( )

**02. கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. குறிஞ்சி பூக்கள் எவ்விதமாகக் காட்சியளித்தன?
2. முதன் முதலாக குறிஞ்சி மலரை கவனித்து, பல வகை குறிஞ்சி மலர்கள் இருக்கின்றன என கூறியவர்கள் யாவர்?
3. மதுரைக் காஞ்சி எனும் நூலில் கருங்காற் குறிஞ்சி பற்றிக் கூறப்படும் விடயங்கள் யாவை?
4. குறிஞ்சி மலர் பற்றி ஆய்வு நடத்தி வந்த நிறுவனம் எது?
5. குறிஞ்சி மலர்கள் எத்தனை வருடங்களுக்கு ஒரு முறை பூக்கும்?

**03. சரியா்ன விடையைத் தெரிக.**

1. பலர்பால் சொல்,
   1. கிளிகள் 2. நண்பன் 3. ஆசிரியன் 4. சிறுவர்கள்
2. படர்க்கை வினைச்சொல்,
   1. பாடினேன் 2. பாடினாய் 3. பாடியது 4. பாடினீர்கள்

3. பலவின்பால் நிகழ்கால வினை,

1. ஓடுகின்றான் 2. ஓடுகின்றன 3. மாடுகள் 4. ஓடின

4. இறந்தகால உயர்திணை ஒருமை வினைச்சொல்,

1. வந்தார்கள் 2. வந்தது 3. வருகிறாள் 4. வந்தான்

5. வயலும் வயல் சார்ந்த நிலம்,

1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல்

**04. கீழ்வரும் வாக்கியங்களைக் கொண்டு அட்டவணையைப் பூரணப்படுத்துக.**

1. கட்டிடங்கள் உயரமாக காணப்பட்டன.
2. அம்மா சுவையாக சமைக்கிறார்.
3. நான் நடனம் ஆடுவேன்.
4. சிறுவர்கள் அமைதியாக எழுதுகிறார்கள்.
5. மரம் சரிந்து விழுந்தது.

| தொ. இல | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | | | | | |
| 02 | | | | | |
| 03 | | | | | |
| 04 | | | | | |
| 05 | | | | | |

**05. கீழ்வரும் வாக்கியங்கள் குறிக்கும் தன்மை, முன்னிலை, படர்க்கை இடங்களை எழுதுக.**

1. நாங்கள் பாட்டுப் பாடுவோம். -
2. வண்டுகள் ரீங்காரம் செய்தன. -
3. யான் கவிதை வாசித்தேன். -
4. நீங்கள் எங்கே சென்றீர்கள்? -
5. ஆதித்யா சித்திரம் வரைகிறான். -